RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s537

# பெரியாரிய பார்வையில் நாட்டுப்புற மூடநம்பிக்கைகள்

**செ.மா. சிவக்குமார்** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு-638004, தமிழ்நாடு, இந்தியா

# Folk superstitions from the Periyar point of view

**S.M. Sivakumar** [a, *]

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode-638004, Tamil Nadu, India

* Corresponding Author: sivakumarnc@gmail.com

Received: 15-07-2021
Revised: 17-06-2022
Accepted: 03-07-2022
Published: 25-08-2022

Check for updates

**ABSTRACT**

The basis of all the philosophies of Periyar, the father of the Self-Respect movement, is self-awareness. Such self-respect is an essential quality for mankind, but the obstacles to this feeling are, in Periyar's view, lack of self-confidence and greed. Both of these are barriers to the sense of self. The folk songs of Thanthai Periyar are unique. Self-respect and power are also seen among the rural masses, such as in rituals, songs, marriages, astrology, etc. There are various kinds of superstitious songs among women, such as widow marriage, pregnancy, son, daughter-in-law, kaathu karuppu (bad elements), etc. Even today, superstitious practices are prevalent in rural and urban areas. Through the folk songs of Thanthai Periyar, ritual, self-respect, and self-confidence are expressed.

**Keywords:** Philosophies, Superstitions, Ritual, Thanthai Periyar

## முன்னுரை

சுயமரியாதை இயக்கத் தந்தை பெரியாரின் அனைத்துத் தத்துவங்களின் அடிப்படை தன்மான உணர்ச்சியேயாகும். இத்தகு தன்மானம் மனித குலத்திற்கு இன்றியமையாதப் பண்பு, ஆனால், இத்தன்மான உணர்ச்சிக்கு தடையாவன பெரியாரியல் பார்வையில் இரண்டு அவையானவன தன்னம்பிக்கையின்மையும், பேராசையுமேயாகும். இவ்விரண்டுமே தன்மான உணர்ச்சிக்கத் தடையாயிருப்பவை என்பதைக் கீழுக்கண்டவாறு விளக்குகிறது பெரியாரியல். "நாளைக்கு வேண்டும் என்று தேடும் தன்னம்பிக்கையற்ற தன்மையும் எவ்வளவு கழித்தலும் போதாது என்கிற பேராசையும் அடிமைத்தன்மையும் மனிதனின் பிறப்புரிமையாகியத் தன்மானத்திற்கு இயற்கைத் தடைகள்" (Kamalakannan & Angayarkanni, 2015).

## பெரியாரியலில் மூடநம்பிக்கைகள்

தன்னம்பிக்கைக்குப் பதிலாக மக்களிடம் மண்டிக் கிடப்பது அறியாமையினால் ஏற்படும் மூடநம்பிக்கையாகும். இந்த மூடநம்பிக்கை தமிழர்களை நகரம், கிராமம் என்ற பிரிவில்லாமல், நேற்று, இன்று என்ற பகுப்பில்லாமல் எங்கும் எவரையும் பிடித்து இருப்பது உண்மை. எனினும் நகரத்து மக்களைக் காட்டிலும் கிராமத்து மக்களிடமும், படிக்காத பாமரரிமுடம் படித்தவர்களைவிட அதிகமாகவும் மூடநம்பிக்கைகள் பழக்கத்தில் இருப்பதைக் காணமுடிகின்றது. பொதுவாக இந்த மூடநம்பிக்கைகள் சமயஞ்சார்ந்த சடங்குகள், மற்றும் சோதிடம் ஆகியவற்றில் நிலைபெற்றிருத்தலைக் கிராம மக்களின் உணர்ச்சி வெளிப்பாடான நாட்டுப்புறப் பாடல்களில் பரக்கக் காணமுடிகின்றது.

குறிப்பாக நாட்டுப்புற பாடல்களில் கிராமப்புற மக்களிடம் காலகாலமாக வழக்கத்திலுள்ள பல்வேறு மூடநம்பிக்கைகளை அறிய முடிகின்றது. பல்வேறு மூடநம்பிக்கைகளை வெறுத்துப் போகும் தன்மைகளும் சில பல பாடல்களில் வெளிப்படுகின்றன. தந்தை பெரியாரின் பல்வேறு மூடநம்பிக்கை ஒழிப்புக் கருத்துக்கள் அவர் மக்களிடம், குறிப்பாக நாட்டுப்புற மக்களிடம் கண்ட மூடநம்பிக்கைக்களை கொண்டு எழுந்தவைகளாகவே இருக்க முடியும்.

சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள ஒவ்வொருவரும் மூடநம்பிக்கையை எதிர்த்துப் போர் புரிந்தாக வேண்டும் என்பதே பெரியாரியலின் நோக்கமாக இருந்தது. "நமக்கு யாரிடமும் சண்டை இல்லை. நமது சுயமரியாதையைக் காப்பாற்ற நாம் நமது மூடநம்பிக்கைகளுடன் போர் செய்து ஜெயம் பெற்று சுயமரியாதையை அடைய வேண்டும் என்றுதான் சொல்கிறோம்" என்கிறது பெரியாரியல் (Rajendiran, 2016).

அறிவியல் மானுட வாழ்வில் பல கூறுகளையும் செம்மைப்படுத்தும் ஒரு நெறியாகும். ஆனால், இந்த அறிவியல் நோக்கை ஏற்காமல், சமயஞ்சார்ந்த கட்டுக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு எண்ணிலடங்காத மூடப்பழக்கங்களை மேற்கொண்டு பணம், நேரம், ஆகியவற்றை பறிகொடுப்பதோடு, மனவியலாகவும் பாதிப்பிக்குள்ளாகின்றனர் கிராம மக்கள். அவர்களின் இந்த நிலையை நன்கு விளக்குகின்றன நாட்டுப்புறப் பாடல்கள் (Chandrakumari, 2015).

கிராமப்புறத்தில் வயலுக்கு தண்ணீர்ப் பாய்ச்ச இரவு நேரத்திலேயே செல்ல வேண்டி உள்ளது. பங்காளிகள் ஒவ்வொருவரும் முறை வைத்து தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டிய நிலையே இதற்குக் காரணம் ஆகும். தன் வயலுக்கு எப்போது முறையே அந்த நேரத்தில், நேரம் காலம் பாராது செல்ல வேண்டியுள்ளது. கிராமத்து இளைஞர்கள் கடினமான வேலையைச் செய்வதனால் உரம் பொருந்திய உடல் வலு உடையவர்களாகக் காணப்படுவார்கள். மோகினிப் பேய் இரவு நேரத்தில் வயலுக்குப் போகும் இளைஞர்களைப் பிடித்துக் கொள்ளும் என்று கிராம மக்கள் பெரிதும் நம்புகின்றனர். தன் கணவனை இவ்வாறாக மோகினிப் பேய் பிடித்துக் கொள்ளும் என்று நம்பி அஞ்சும் ஒரு பெண்க் கீழ்க்கண்டவாறு பாடுகிறாள்.

"தண்ணி பாய்ச்ச போனியின்னா

தடம் பார்த்து போ மாச்சான்

மூலக்காட்டுக்குள்ள

மோகினி பேய் இருக்குதுன்னு"

இவ்வாறு மோகினிப் பேய் பயம் என்பது மனவியலாக எவ்வளவு பயத்தை உண்டாக்கி, உடலைக் கெடுக்கும் என்கிற அறிவியல் செய்திகளை ஏற்காத மக்கள் மோகினிப் பேய் பற்றிய பயத்தோடு அஞ்சி நடுங்குகிறவர்களாய் உள்ளார்கள் என்பதைப் பின்வரும் நாட்டுப்புறப் பாடல் நன்கு வெளிப்படுத்துகிறது (Chandrakumari, 2015).

"இராத்திரி நேரத்தில்

இராந்தர எடுத்துகிட்டு

நடுசாமத்தில போறமச்சான்

காத்து கருப்பு அண்டிபுடும்

கவனமா நீயும் போமச்சான்"

மோகினிப் பிசாசு பிடித்துக் கொள்கிறது. செத்து போனவன் வந்து பிடித்து கொள்கின்றான் போன்ற மூடநம்பிக்கைக்கு ஆட்படுபவர்கள் பலவீனமடைந்து நோய்வாய்பட்டு மனவியல் பாதிப்புக்கு ஆளாவதோடு நம்பிக்கை தன்னம்பிக்கை ஆகியவற்றை இழந்து தமக்கும் தம்மை சார்ந்தவர்களுக்கும் சமுதாயத்திற்கும் பெரிய துன்பம் உண்டாக்குகிறவர்களாக ஆகி விடுகிறார்கள். சுயநலம் கருதி மந்திர, மாந்தீரிக பரிகாரம் செய்வதாகக் கூறிப் பணம் பிடுங்கி சிலர் கட்டிவிடும் கட்டுக் கதைகளே இத்தகையே மூடநம்பிக்கைகளுக்கு அடிப்படையாக விளங்குவதைப் பகுத்தறிவுக் கொண்டு ஆராயும்

யாரும் அறிய முடியும் என்று இத்தகைய மூடநம்பிக்கைளின் அடிப்படையைத் தோலுரித்துக் காட்டுகிறது பெரியாரியல் (Chandrakumari, 2015).

பொதுவாக அடிமைத் தனத்துக்கு ஆட்பட்டு அல்லல்படும் பெண்களை அச்சுறுத்தி மேலும், அடிமைப்படுத்த அடக்கிவைக்க ஒரு சாதனமாகப் பேய் பிசாசு பற்றிய மூடநம்பிக்கைகள் பயன்படுகின்றன. பெண்ணை பயமுறுத்தும் ஒரு நாட்டுபுறப் பாடல் காட்டும் பேய் நம்பிக்கை பின்வருமாறு அமைகிறது.

"வயசு வந்த பொண்ணு நீயும்

வயல் பக்கம் போகாதடி

தூக்கு போட்ட கந்தணுமே....."

பொதுவாகப் பெண்ணை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சமுதாயத்தில் அவளுடைய திருமணம் என்பது கருத்தொருமித்த காதல் திருமணமாக இருக்க வழியில்லை. மேலும், பெற்றோர்கள் பெண்ணுக்குரிய ஆணைத் தேடுகையில், அல்லது ஆணுக்குரிய பெண்ணைத் தேடுகையில் சோதிடம், ஜாதகம், பஞ்சாங்கம், குறி கேட்டல் ஆகியவற்றில் முழுக்கவனம் செலுத்துவது நடைமுறையில் உள்ளது. இதன் விளைவாக ஓர் ஆணை விரும்பும் பெண்ணோ, பெண்ணை விரும்பும் ஆணோ தாம் விரும்பியவாறு மனம் முடித்து வாழவே முடியாத நிலை ஏற்பட்டுத் தமது வாழ்வையே பாழாக்கிக் கொள்ளும் நிலையும் ஏற்படுகிறது. சோதிடம், ஜாதகம், பஞ்சாங்கம் பார்த்துப் பலன் சொல்லுதல், குறி சொல்லுதல் ஆகிய பாட்டுக்கள் அனைத்திற்கும்க்காரணம், சிலரது பேராசையும், மூடநம்பிக்கையும், அவர்களது மதக்கருத்துக்களும் பகுத்தறிவை மறக்கச் செய்வதுமேயாகும்" என்கிறது பெரியாரியல் (Chandrakumari, 2015).

காதலர் இருவர் தாம் மணந்து கொள்ள தந்தை தாயார் பார்க்கப் போகும் பஞ்சாங்கம் தமக்குப் பொருத்தமில்லை என்று கூறிவிட்டால் தாம் மணக்க முடியாது என வருத்தும் நிலையை கீழ்க்காணும் நாட்டுப்புறப் பாடல் நன்கு விளக்குகின்றது.

"தாயும் எந்தன் தகப்பனாரும்

தடம் பார்த்து போறாங்க

பஞ்சாங்கம் பலிக்கனும்னு

வேண்டி நான் நிக்கிறனே......"

என்று அஞ்சி நடுங்கும் நிலை ஏற்படுவது மூடநம்பிக்கையின் விளைவல்லவா?

நாள் பார்த்து, நட்சத்திரம் பார்த்து, குலம் பார்த்து, கோள் பார்த்து, ஜாதகம், பஞ்சாங்கம், இராசி அனைத்தையும் பார்த்து நடைபெற்ற வைதீக திருமணங்கள் அத்தனையும் வலுவாக வெற்றிகரமாக இயங்குகின்றன என்று சொல்ல முடியாது. அவ்வகையான திருமணங்களும் தோல்வியில் முடிந்து, கணவனை இழந்து கைம்பெண்ணாய் மகள் தாய் வீட்டிற்கு வருவதுண்டு என விளக்கும் நாட்டுப்புற பாடல்களும் சில உண்டு (Chandrakumari, 2015).

"பஞ்சாங்கம் பார்த்து பலநாளு யோசிச்சி

எட்டுப் பொருத்தம் இருக்குதுன்னு

பார்க்கிறவ எல்லாம் சொன்னான்னு

நாளும் பார்த்து நல்லபடியா மணம் முடிச்சேன்....."

சோதிடம் பார்த்து முடித்த மணம் தோல்வியுற்றது என மணமகளின் தாய் வருந்துவதை வெளிப்படுத்தும் இப்பாடல், சோதிடம் சரியாக பார்க்கப்படவில்லை அதனால்தான் இப்படி நேர்ந்தது என அந்தத் தாய் கூறுவதாக அமைகிறது. சோதிடத்தின் மீது அந்த கிராமத்துத் தாய் நம்பிக்கை இழக்கவில்லை. ஆனால் பாடலின் இறுதியில் "இனி சாதகம் பார்க்க மாட்டேன் சடங்கு ஏதும் செய்ய

மாட்டேன்" என்று அந்த தாய் பிரகனப்படுத்துவது இயலாமையைக் காட்டுவதாக உள்ளது (Chandrakumari, 2015).

இவ்வளவு நடந்த பின்னும் இந்த மக்களிடம் சோதிடம் பற்றிய நம்பிக்கை இன்று போகமைக்குக் காரணம் யாதென்று ஆராய்கிறது. பெரியாரியல். "பெண்களைப் பொறுத்தவரை அவர்களின் சுதந்திரமற்றத் தன்மையும், சார்பு நிலையுமே அவர்களின் இயலாமைக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் பெரிதும் காரணமாக இருக்கிறது" என்கிறார் தந்தை பெரியார். பெண்ணடிமை ஒழிப்பு சாத்தியப்படும் வரை பெண்களின் மூடநம்பிக்கைகளை களைவது முடியாத காரியமே ஆகும் (Kamalakannan & Angayarkanni, 2015).

பிள்ளை பேறின்மைக்கானக் காரணங்களை உள்ளது உள்ளபடி விளக்கி, அவற்றிற்கானத் தீர்வுகளையும் முன் வைக்கிறது இன்றைய அறிவியல் மருத்துவம். ஆனால், கிராமப்புற மக்களிடையே இது குறித்து விழிப்புணர்ச்சி பரவாத நிலையில், மக்கள் பிள்ளைப் பேறு பற்றிய தம் ஏக்கங்களை பற்றிய மருத்துவ உதவியை நாடாமல் சோதிடன், மாந்தீரீகன் ஆகியோரை நாடும் வழக்கம் இன்றும் நாட்டுப்புற மக்களிடம் இருப்பதை கீழ்க்காணும் நாட்டுப்புற பாடலில் அறிய முடிகிறது.

இவளுக்கு பிள்ளைப்பேறு கிடையாது என்று ஒரு பெண்ணின் மாமியாரிடம் ஒரு சோதிடன் கூறிவிட, அவள் மாமியாராலும் மற்ற உறவினர்களாலும் ஏசப்படுகிறாள். மலடி என தூற்றப்படுகிறாள். எல்லாவற்றிற்கும் மேலாக விளக்கி வைத்து விட்டு. அவளுடைய கணவனுக்கு வேறு ஒரு பெண் பார்த்து மணம் முடிக்கப் போவதாகக் கூறுகின்றார்கள் இந்தக் கொடிய நிலையால் மனம் குமுறும் பெண் பாடும் பாடல் இது.

"கல்யாணம் முடிச்சவுடன் கையில் புள்ள இல்லையின்னு

கடன்கார பயமக்க கண்டபடி பேசறாங்க

என்னோட கட்டன வங்களுக்கெல்லாம்

இடுப்பிலயும் வயித்திலயும் இரண்டு புள்ள இருக்குதுன்னு…"

திருமண வாழ்க்கையில் பிள்ளைப்பேறு என்பது இயற்கையாய் ஒரு அத்தியவாசியமே அல்ல என்பது பெரியாரின் கருத்து (Chandrakumari, 2015). பிள்ளைப்பேறு கட்டாயம் என்று கருவது ஒரு முட்டாள்தனம் என்று புரட்சிகரமாக கருதினார் தந்தை பெரியார். பிள்ளைப்பேற்றுக்காக ஏங்குவதும், அது ஏற்படாத விடத்து அதற்காகப் பெண்களை ஜோதிடரிடம் அழைத்துச் செல்வதும் சடங்குகள் பல செய்வதும் அப்படியும் பிள்ளைப்பேறு வாய்க்கவில்லை எனில் அந்தப் பெண்ணை கொடுமைப் படுத்துவதும் சகிக்க முடியாத முட்டாள்தனம் என்று முழங்கினார் பெரியார். "திருமணம் ஆனவுடன் குழந்தை பெற வேண்டும் என்கிற முட்டாள் தனம் ஏற்பட்டு அது ஒரு ஆசையாகி, சொத்தாகி 'மோட்சத்திற்கு உதவும் காரியமாகி கடைசியாய் துன்பமுற்று மற்றவர்களுக்கும் தொந்தரவு கொடுப்பதைத் தவிர வேறு ஒரு பயனும் இல்லை" என்கிறது பெரியாரியியல் (Kamalakannan & Angayarkanni, 2015). ஆக பிள்ளைப்பேறு என்பதன் ஏக்கம் பெண்கள் சமூகத்தை அடிமையாக்குவதும் மேலும், வியாதி முதலானவற்றை உண்டாக்குவது மட்டுமன்றி, அந்த ஏக்கமே துன்பமாகி பெண்களை சித்ரவதைப் படுத்துவதைச் சுட்டிக்காட்டுகிறது பெரியாரியல். "பிள்ளை பெறுவதினாலேயே பெண்கள் சமூக அடிமையாகி அநேக ஆபத்துகளுக்கும் வியாதிகளுக்கும் உள்ளாகி அற்ப ஆயுளுடன் துன்பமும் பட வேண்டியதாகி அவர்கள் வாழ்வே பரிதாபத்துக்குரியதாக முடிகிறது. பிள்ளைகளை காப்பற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்கே என்று கருவதுவதால் சுதந்திரமும் வீரமும் இன்றி அடிமையானதும் ஆன காரியங்களுக்கு ஆளாகின்றார்கள். பெண்கள் துன்பம் இப்படி இருக்க பொதுவில் வேலையில்ல துன்பத்தை நீக்கவும் மக்கள் கவலையும் தொல்லை இல்லாமல் இருக்கவும் பிள்ளைப்பேற்றை குறைப்பதும் என்பதும் தக்க வழியாகும்" (Kamalakannan & Angayarkanni, 2015).

மனித உறவுகளும் சமுதாய உறவுகளும் சீருற அமைந்தாலன்றி மானுடர்கள் மகிழ்ச்சியாய் வாழ இயலாது. இந்த சீரான மனித உறவுகளை பாழ்படுத்தும் உணர்ச்சிகளை முதன்மையானதாகக் கருதப்படுவது பொறாமை உயர்ச்சியே ஆகும். "எல்லாருக்கும் சம உரிமை, சம ஈவு என்பதான

சமத்துவ சமுதாயத்தில் தான் பொறாமை, போட்டி ஆகிய துர்குணங்கள் நீங்கி அமைதியும் சாந்தமும் நிலவ முடியும்". என்கிறது பெரியாரியியல் (Kamalakannan & Angayarkanni, 2015).

ஆனால், சொத்துரிமை சிலரிடத்தில் குவிந்து இருக்க மற்ற பலர் உழைப்பேயே நம்பி வாழும் சமூகத்தில் போட்டியும் பொறாமையும் பெரும் இடையூறாக இருப்பது இயல்பே. கிராமப்புற மக்களிடம் ஒருவருக்கொருவர் பொறாமைக் கொண்டு மற்றவரின் வாழ்வுச் செழிப்பை சகித்துக் கொள்ள முடியாமல் தூற்றிக் கொண்டிருக்கும் நிலை எங்கும் காணப்படுகிறது. இப்படி பொறாமைப்படுபவர் கண்வைத்து விடுவதால் தமது வாழ்வில் துன்பம் ஏற்படும் என்று கருதி அஞ்சும் மனநிலையோடு கிராம மக்களிடம் பரவலாக இருப்பதை அவர்களுடைய நாட்டுப்புற பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன. இந்த மூடநம்பிக்கை "ஒருவர் மீது ஒருவர் பகை கொண்டிருக்கும் காழ்ப்புணர்ச்சி கொண்டு மோதிக் கொள்ளும் வழிவகுக்கிறது. பகுத்தறிவு உள்ள மனிதராக நாம் நடந்துக் கொள்வதன் மூலம் இத்தகைய மூடநம்பிக்கையை ஒழித்து ஒற்றுமையாக வாழ வேண்டும்" என அறிவுறுத்துகிறது பெரியாரியல் (Kamalakannan & Angayarkanni, 2015).

கிராமப்புறத்தில் அனைத்து நிலையிலும் சிறப்போடு வாழக் கூடிய பிள்ளைகளை பார்த்து மற்றவர்கள் பொறாமைப் படுவதாகவும் அந்த பொறமையின் காரணமாக அவர்கள் பார்க்கின்ற பார்வையே கண் திருட்டியாக மாறுவதாகவும் எந்த செயல் செய்யும் பொழுது பார்க்கிறார்களே அந்த செயல் பழுது அடைவதாகவும் அந்தச் செயல் தொடர்ந்து செய்ய முடியாத நிலை ஏற்படும் பொழுது அதற்கு காரணம் கண் திருஸ்ட்டியே என்று மூடத்தனமாக நம்புவது என்று அவர்கள் பாடுகின்ற ஒப்பாரிப் பாடல் உறுதிப்படுத்துகிறது.

"கோடி சனம் தொழுதாலும்

குனிச்ச தலை நிமிரமாலும்

கும்பிட்டு இருந்தியேப்பா

ஊருசனம் உன்மேல் கண்ணும் போட்டாங்க......

கடின உழைப்பை செலுத்தும் ஒரு இளைஞன் பார்ப்பவர்கள் கண்வைத்து விடுவதாகவும் அதனால் அவன் இறந்துவிடுவதாகவும் எண்ணி, ஒரு தாய் பாடும் ஒப்பாரிப் பாடல் கண் திருட்டி பற்றி எந்த அளவிற்கு மக்கள் மூடநம்பிக்கையில் ஆழ்ந்துள்ளார்கள் என்பதை நன்கு வெளிப்படுத்துகிறது (Chandrakumari, 2015).

"அருமை மகனே என் ஆசையாய் வளந்தவனே

குடும்பம் சிறக்கனுமன்னு குறியாய் இருந்தவனே

பங்காளிகள் முன்னாடி பாங்காய் திரிஞ்சவனே

எந்த நாய் கண்ணு வைச்சு இப்படியும் உனக்கு ஆச்சு"

என்று புலம்பும் தாயின் மூடநம்பிக்கை அனுதாபத்திற்கு உரியதே (Chandrakumari, 2015).

## முடிவுரை

இத்தகைய மூடநம்பிக் கைகளுடன் வாழும் மனிதர்களை, உறவினரை சந்தேகித்தும், காழ்ப்புணர்ச்சி கொண்டும் ஏசச் செய்யும் இழிவான முறைக்குக் காரணமாக அமைவது கண்கூடு. எனவே, பெரியாரியல் பகுத்தறிவுக் கண்ணோட்டம் மக்களிடம் பயணிக்கும் வரை இத்தகைய சமூக உறவுக்குக் அடிப்படையான மனித மதிப்பீடு இல்லாத மூடநம்பிக்கையால் விளையும் ஆபத்துகள் சமூகத்தை சீர்படாமல் தடுக்கும் காரணிகளாகவே திகழும்.

 DOI: 10.34256/irjt22s537

## References

Chandrakumari, (2015) Periyarin Paarvaiyil Nattupurap padalkal, Muthu Santhosh Pathippagam, Chennai, India.

Kamalakannan, P. Angayarkanni, P.S. (2015) Periyarum Tamilum, Samooga Needhi Noorpathippagam, Salem, India.

Rajendiran, (2016) Dravidap Periyar Yarukku Ethiri, Nimirvom Veeliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License